**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 7 June 2017

# பாதிக்கும் மேலான அறப்பணி அமைப்புகளில் இடர் நிர்வாகக் கொள்கைகள் இல்லை

அறப்பணி, பொதுநல அமைப்புகளில் பாதிக்கும் மேலானவற்றிடம் அல்லது 50.9 விழுக்காட்டு அமைப்புகளிடம் இடர்களைக் கையாளக்கூடிய முறையான கொள்கைகள் அல்லது வழிமுறைகள் எதுவும் கிடையாது, அல்லது அத்தகைய கொள்கைகள் நடைமுறையில் இருக்கின்றதா என்பது தெரியாது.

மோசடி இடர், ஆளுமை இடர், தகவல் தொழில்நுட்ப இடர் போன்றவை இடர்களில் உள்ளடங்கும்.

அறப்பணி மன்றம், கேபிஎம்ஜி, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக வர்த்தகப் பள்ளி ஆகியவை நேற்று வெளியிட்ட ஆய்வின் முடிவுகள் இதனைக் காட்டுகின்றன. இந்த ஆய்வு சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்டது.

அறப்பணி அமைப்புகள் எதிர்நோக்கும் மூன்று முக்கிய இடர் நிர்வாகச் சவால்களை ஆய்வு கண்டறிந்தது.



இடர் நிர்வாக அனுபவமின்மை அல்லது திறமையின்மை (79.3%), இடர் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள மனிதவளமின்மை (70.3%), இடர் நிர்வாக நடைமுறைகளை அமலாக்க நிதி வளமின்மை (59.0%) ஆகியன அவை.

“நல்ல இடர் நிர்வாகம் என்பது அமைப்பு முழுவதும் சரியான பண்புகளையும் கலாசாரத்தையும் நடைமுறைப்படுத்துவதாகும்.

“அதோடு, இடர்களை அடையாளம் காணவும், புரிந்துகொள்ளவும், சமாளிக்கவும் தகுந்த ஆற்றலை அறப்பணி அமைப்புகள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

“சீரிய தலைமைத்துவத்தின் ஒரு பகுதி இது. இதன்வழி பயனாளிகள், ஊழியர்கள், தொண்டூழியர்கள் அனைவரின் நலனும் பாதுகாக்கப்படும்,” என்றார் அறப்பணி மன்றத்தின் தலைவர் திரு ஜெரார்ட் ஈ (படம்).

அறப்பணி அமைப்பின் நிதி மற்றும் வளங்கள் தவறாகக் கையாளப்படுவது உள்ளிட்ட மோசடி இடரை அறப்பணி அமைப்புகள் அறவே சகித்துக்கொள்வதில்லை என்பதையும் ஆய்வு கண்டறிந்தது.

அறப்பணி அமைப்புகளும் பொதுநல அமைப்புகளும் இடர் நிர்வாகத்தை மேம்படுத்த உதவியாக, “நிறுவன இடர் நிர்வாகத் தொகுப்பு” நேற்று வெளியிடப்பட்டது.

வெவ்வேறு வகையான அறப்பணி அமைப்புகளின், குறிப்பாகக் குறுகிய வளங்கள் கொண்ட அமைப்புகளின், தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கக்கூடிய அடிப்படை இடர் நிர்வாக முறையைத் தொகுப்பு வழங்குகிறது. சீரிய நடைமுறைகளையும் வழங்கும் இந்தத் தொகுப்பு இணையத்தில் இலவசமாகக் கிடைக்கும்.

தொகுப்பில் உள்ளடங்கும் பரிந்துரைகளை அறப்பணி அமைப்புகள் அமலாக்குவதற்கு உதவியாகப் பயிற்சி வகுப்புகளும் பயிலரங்குகளும் நடத்தப்படும்.

பயிற்சி, ஆலோசனை தேவைகளுக்கு மானியம் வழங்கும் தொண்டூழியச் சமூகநல அமைப்புகள்–அறப்பணி அமைப்புகள் ஆற்றல் நிதியையும் அறப்பணி அமைப்புகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.